**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| MCOP . No. 7/2024 | | R.W.–1 |
|---|---|---|
| Name | : | கிருத்திகா |
| Father's Name | : | கலியமூர்த்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Date | : | 08.04.2026 |

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் அரியலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் விக்கிரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.188/2023 சம்மந்தப்பட்ட விபத்தில் ஈடுபட்ட TN 61 H 6628 மற்றும் TN 28 BF 3502 வாகனங்களின் வாகன ஆய்வறிக்கை மற்றும் அதன் ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிம விவரங்கள் கேட்டு அழைப்பாணை பெறப்பட்டதன் பேரில் ஆஜராகி உள்ளேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அரியலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய 07.04.2026 ஆம் தேதியிட்ட கடிதம் சா.சா.ஆ.1. மேற்படி TN 61 H 6628 வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை உண்மைநகல் சா.சா.ஆ.2. TN 28 BF 3502 வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை உண்மைநகல் சா.சா.ஆ.3. TN 28 BF 3502 வாகனத்தின் ஓட்டுநரான பாக்கியராஜ் என்பவரது ஓட்டுநர் உரிம விவர extract சா.சா.ஆ.4. TN 61 H 6628 வாகனத்தின் ஓட்டுநரான கொளஞ்சிநாதனின் ஓட்டுநர் உரிம விவரங்கள் எதுவும் எங்கள் அலுவலக கணினிப்பதிவில் இல்லை என வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய சான்று சா.சா.ஆ.5.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு நபரின் பெயர், தகப்பனார் பெயர் மற்றும் பிறந்ததேதி இருந்தால் அவர்

ஓட்டுநர் உரிமம் எடுத்துள்ளாரா, எங்கு எடுத்துள்ளார் போன்ற விவரங்களை எடுத்துவிடலாம். ஆனால் இவ்வழக்கு சாட்சிய சம்மனில் அந்த விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: ஒம்./–கிருத்திகா

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.04.08 16:53:27 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.